இல்லை என்ற பதிலையும் அளிக்கிறார்கள். இவை எல்லாம் நமது பாராளுமன்ற மரபுக்கும், பத்திரிகை சுதந்திரத்திற்கும் முரணானது.

இப்பிரச்சினையில், மாலை முரசு பத்திரிகை அவையினது உரிமையை மீறி இருந்தாலும், இம்மாதிரி பிரச்சினையில் அவை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இருந்தாலும், அவை தனது கண்ணியத்தைக் கருதியும் பரந்த நோக்கத்தினாலும் இம்மாதிரி உரிமை மீறல்களை பொருட்படுத்துவதில்லை. இதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு அவையினது உரிமைகளை மீறுவது என்பதும் முறையாகாது.

ஆறாவது சட்ட மன்றப் பேரவை ஆரம்பத்தில் ஒரு சில நடவடிக்கைகளை இம்மாதிரியான பிரச்சினைகளில் நமது அவை மிகவும் கடுமையாக இன்றி, சற்று பரந்த நோக்கோடு, எவ்வித நடவடிக்கையும் இல்லாது விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

ஆயினும், பத்திரிகைகளுக்கு ஓர் எச்சரிக்கை செய்வது நலம். பத்திரிகைகளின் உரிமைகள் எவ்வளவுதூரம் காக்கப் படவேண்டுமென்று பத்திரிகைகள் விரும்புகின்றதோ, அவ்வாறே அவர்களும் இப்பேரவையினது உரிமைகளும் மதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில், இந்த அவையின் நட வடிக்கைகளுக்கு உரிய மதிப்பையும் மரியாதையையும் கொடுக்க வேண்டும். அவ்வாறு நடைமுறையில் செயல்படும்போது இவ்வவையின் நடவடிக்கைகளை திரித்தோ, மாற்றியோ அல்லது வேறு வகையிலோ குறை கூறும் அளவுக்கு இல்லாது அவையின் நடவடிக்கைகளை வெளியிடவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கலாம் என்று கருதி இப்பத்திரிகையின்மீது தொடர்ந்து வேறு நட வடிக்கை ஏதும் தற்பொழுது தேவையில்லை என்று கருது கிறேன். இம்மாதிரி தொடர்ந்து தவறுகள் ஏற்பட்டால் அவை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

(ஈ) 'முரசொலி' நாளேடுமீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 13—7—1977 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் 9—7—1977 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி 10—7—1977 தேதியிட்ட முரசொலி பத்திரிகையில் முதல் பக்கத்தில் 'சட்ட மன்ற நடவடிக் கை'' என்ற தலைப்பிலும், "கலைஞர் எழுப்பிய கேள்விக்கு

1977, ஜூலை 23] [பேரவைத் தலைவர்]

எம்.ஜி.ஆர். தந்த பதில்'' என்ற துணைத் தலைப்பிலும் மாண்புமிகு முதல்வர் கொடுத்த பதில் முழுவதும் இல்லாதது மட்டும் அன்றி அதில் முக்கியமான கருத்தின் சுருக்கமும் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு உரிமை பிரச்சினையை எழுப்பினர். இப்பிரச்சினை குறித்து நான் எனது தீர்ப்பை பிறகு கொடுப்பதாகத் தெரிவித்து இருந்தேன்.

இது பற்றி முரசொலி நாளேடு ஆசிரியர் அவர்கள், அவரது 20—7—1977 தேதியிட்ட பதிலில், நான் ''அண்ணா'' பத்திரிகைமீது எழுப்பப்பட்ட உரிமை பிரச்சினைமீது கொடுத்த தீர்ப்பின் சில பகுதிகளை மட்டும் கோர்வையின்றி எடுத்துக் காட்டி அத்தீர்ப்பில் பேரவைத் தலைவர் கூறியுள்ளது முரசொலி பத்திரிகைக்கும் பொருந்தும் என்ற வகையில் எழுதி உள்ளார்கள். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல. மேலும் சென்னை 10—7—1977 தேதியிட்ட ''முரசொலி'' செய்திக்கும் சட்டமன்ற குறிப்பேட்டில் பதிவாகியுள்ள பேரவை நடவடிக்கைகளுக்கும் அதே தேதி ''தினமணி'' பத்திரிகையில் வந்துள்ள நடவடிக்கை குறிப்பின் சுருக்கத்திற்கும் மாறுபாடுகள் உள்ளன. முதல்வர் பேச்சில் கீழ்க்கண்ட பகுதி முக்கியமான பகுதி ஆகும்—

''.........நான் நாடாளுமன்ற தேர்தலில் நாங்கள் யாரை ஆதரித்தோமோ அவர்கள் இந்தத் தேர்தலில், இந்தச் சின்னத்தை எம்.ஜி.ஆர். ஆதரித்தார்கள், அதற்கு வாக்களியுங்கள் என்று கேட்டார்கள் என்பதையும், நடந்து முடிந்த இடைத் தேர்தல் பற்றி எல்லா உறுப்பினர்களுக்கும் நினைவிருக்கும் என்று கருதுகிறேன்— திண்டுக்கல் தேர்தல்— அதிலே என்னுடைய படத்தைப் போட்டு உதயசூரியனுக்கு ஓட்டுப்போடுங்கள் என்று விளம்பரம் செய்தார்கள் என்பதையும்.................தெரிவித்துக்கொள்கிறேன்.''

இதே செய்தியை ''தினமணி'' பத்திரிகை பின்வருமாறு வெளியிட்டுள்ளது.

''.....................எம்.ஜி. ஆரால் ஆதரிக்கப்பட்ட அபேட்சகர் என்று அந்த வேட்பாளர் போஸ்டர்களைப் போட்டுப் பிரச்சாரம் செய்திருக்கிறார் என்றும், அ.இ.அ.தி.மு.க. அப்போதே இதனை ஏன் மறுத்திருக்கக் கூடாது என்றும் மீண்டும் கருணாநிதி கேட்டார்.

ஒவ்வொருவரையும் மறுத்துக்கொண்டே இருப்பது தமது வேலை அல்ல என்று முதல் அமைச்சர் பதிலளித்தார். திண்டுக்கல் தேர்தலில்கூட தி.மு.கவினர் தேர்தலில் தமது பெயரை உபயோகித்துக் கொண்டதற்கு தம்மிடம் ஆதாரம் வைத்துக் கொண்டிருப்பதாகவும்..........................''

TRUTH ALONE TRIUMPHS

எனவே, முரசொலி ஆசிரியர் விளக்கம் கொடுத்திருப்பது ஏற்றுக்கொள்ளும் முறையில் அமையவில்லை. ஆயினும் நான் சிறிது நேரத்திற்கு முன்பாக "மாலை முரசு" பத்திரிகைக்கு கொடுத்த தீர்ப்பில் பத்திரிகைகள் எவ்வாறு அவையின் நடவடிக்கைகளை வெளியிடவேண்டுமென்று கூறியுள்ளேன். அக்கருத்துக்கள் இந்த ஏட்டிற்கும் முற்றிலும் பொருந்தும்.

ஆறுவது சட்டமன்றத்தில் இவை எல்லாம் பற்றி ஆரம்பத்திலேயே கடுமையான நடவடிக்கை வேண்டாம் என்ற எண்ணத்தினால் இப்பத்திரிகைக்கும் அவையின் நடவடிக்கை குறிப்புகள் வெளியிடப்படுவது சுருக்கமாக இருந்தாலும், அவைகளின் மையக் கருத்துக்கள் வேறுபடாமல் வெளியிடப்படவேண்டுமென்று எச்சரித்து இப்பிரச்சனையில் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை என்று தீர்ப்பளிக்கின்றேன்.

(9-50)

திரு. எம். ஏ. லத்தீப் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு லத்தீப் பேசியவை அத்தனையையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று உத்திரவிடுகிறேன்.

THIRU M. A. LATHEEF : As a protest, I walk out of the House.

(திரு. எம். ஏ. லத்தீப் வெளிநடப்புச் செய்தார்]

(6) அறிவிப்பு

அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 193வது விதியின்கீழ் திரு. டி. இராமசாமி அவர்களை அலுவல் ஆய்வுக்குழுவில் உறுப்பினராக நியமிக்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-50—9-56-இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS